**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 13.08.2025**

**O.S. 28/2022**

**வா.சா. 2 – ராஜதுரை**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் மணவிளை CSI சர்ச்சில் 18 வருடமாக செயலாளராக இருந்து வந்தேன் என்றால் சரிதான். CSI சர்ச்சின் சட்டதிட்டங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். CSI சர்ச்சின் சட்டதிட்டத்தின் படி உறுப்பினராக ஒருவர் ஒரு சர்சிக்கு மட்டும் தான் இருக்க முடியும் என்றால் சரிதான். Floating member என்றால் அவர் எந்த சர்ச்சிக்கும் சென்று வழிபாடு செய்யலாம் என்றால் சரிதான். அந்த ஒரு உரிமை தான் அவர்களுக்கு உண்டு என்றால் சரிதான். CSI சர்ச்சின் சட்டதிட்டத்தின் படி Floating member என்பதே கிடையாது என்றால் சரியல்ல. CSI சர்ச்சின் சட்டதிட்டத்தின் படி எந்த விதியின் படி Floating member குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி சட்டவிதிகள் குறித்து தெரியாமல் தான் Floating member இருப்பதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

CSI சர்ச்சின் சட்டதிட்டங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு CSI சர்ச்சின் சட்ட திட்டங்கள் தெரியாது நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் அம்மா என்னுடைய உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். வாதிக்கு நான் தாய்மாமா என்றால் சரிதான். நான் 2021, 2024 ல் நடந்த தேர்தலில் நான் வெற்றி பெறவில்லை என்றால் சரிதான். தேர்தல் சமயத்தில் நான் தோல்வியடைந்ததால் நானும் என் குடும்பத்தினரும் களகம் செய்ததாக ஒரு குற்ற வழக்கு சி.சி.298/2021 நிலுவையில் உள்ளது அதில் நான் வாதி மற்றும் எனது மகன் அனைவரும்

எதிரிகள் என்றால் சரிதான். CSI சர்ச் திறந்திருந்தால் யார் வேண்டுமானாலும் வரலாம் என்றால் சரிதான். 2021ல் தேர்தல் நடந்த பிறகு வங்கி கணக்கு, சாவிகள் மற்றும் கணக்கு புத்தகங்கள் அனைத்தையும் ஒப்படைக்க வில்லை என்றால் சரியல்ல. இதற்கு முன்பு இருந்த பொருளாளர் வீரகுமார் என்றால் சரிதான். அவரும் வங்கி கணக்கு, சாவிகள் மற்றும் கணக்கு புத்தகங்கள் அனைத்தையும் ஒப்படைக்க வில்லை என்றால் சரியல்ல.

நான் மேற்படி பூட்டு சாவிகள் அனைத்தையும் ஒப்படைக்காததால் போலீசார் வந்து சொன்னதன் பேரில் ஒப்படைத்தோம் என்றால் சரியல்ல. எனது பூர்வீக ஊர் அனந்தநாடார் குடியிருப்பு என்றால் சரிதான். மலைவாள் அமைப்பிற்கு நான் வாதியிடம் இருந்து பணம் வாங்கி அனுப்பியதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதன் ஆவணங்கள் சர்ச்சில் உள்ளது. வேறு அமைப்பின் பணங்களை சட்டப்படி வாங்க கூடாது என்பது எனக்கு தெரியுமா என்றால் தொகையாக வாங்கவில்லை காணிக்கையாக தான் வாங்கினேன். கணிக்கையை தட்டில் வைப்பார்கள் அதனை செக்போட்டு கொடுத்துவிடுவோம் என்றால் சரிதான். வேறு அமைப்பில் இருந்து காணிக்கையோ பணமோ வாங்குவதற்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. காணிக்கை வாங்கலாம் என்று என்னை நியமித்து ஏதேனும் அதிகாரம் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. நான் வாதியிடம் இருந்து எவ்வித காணிக்கையும் பெறவில்லை காணிக்கை பெறவும் உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் வாதியின் தாய்மாமா என்ற காரணத்தினால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் நேரடியாக காணிக்கை செலுத்துகிறேன் என்றால் சரிதான். அவர்கள் காணிக்கையை பெற்றுகொண்டுதான் இருக்கிறார்களா என்றால் சரிதான். CSI நிர்வாகத்திற்கோ மணவிளை சர்ச்சிக்கோ வேறு அமைப்பிற்கோ எவ்வித தொடர்பும்

இல்லை என்பதால் காணிக்கை பெற இயலாது என்றால் சரியல்ல. நான் செயலாளராக இருந்த காலகட்டத்தில் அவ்வாறு காணிக்கை பெற்றிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. காணிக்கை பெற்றிருந்தால் அது தவறு என்றும் 1ம் பிரதிவாதியை காணிக்கை பெற நிர்பந்த படுத்த முடியாது என்றால் சரியல்ல. CSI சர்ச்சின் தலைவர் ஆன்மீக மற்றும்நிர்வாக தலைவர் பிஷப் என்றால் சரிதான். அவருக்கு சர்ச் நிர்வாகத்தை குறித்து உத்தரவு பிறப்பிக்க உரிமை உள்ளது என்றால் சரிதான். எனது சாட்சியம் இவ்வழக்கில் ஏற்றுக் கொள்ளதக்கதல்ல நான் வாதி கேட்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் நான் ஒருபோதும் வாதியிடம் இருந்து இதுவரையிலும் காணிக்கை பெறவில்லை என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**